www.tamilarangam.net

# கண்

பார்வை - 1
ஒளி - 7.
KAN. கண்
வைகாசி. 1988



BULLETIN DU "GROUPE DES FEMMES DU SRI LANKA"
இலங்கை மகளிர் சங்க வெளியீடு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணின் பார்வையில்:-

கண், மே மாத இதழாக உங்கள் பார்வைக்கு வருகின்றது. சென்ற மாதமே வெளிவந்திருக்க வேண்டிய இந்த இதழ் உலகத் தொழிலாளர் தினத்தை உள்ளடக்கிய இம் மே மாதத்தில் முகிழ்ப்பதால் முக்கியத்துவம் மிகுந்தது என்பது தாமதிற்கான எமது வருத்தத்தைத் தவிர்த்து மகிழ்ச்சியையே தருகின்றது. சிக்காக்கோ நகர வீதியை சிவப்பாக்கிய முதலாளித்துவ, ஏகாதிபத்திய கொலைவெறிக் கரங்கள் தமது கோரத் தாண்டவத்தை உலகின் பல பாகங்களிலும் இன்னும் நிகழ்த்திக் கொண்டேயிருக்கிறது.

தமது நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து சாத்வீக முறையில் போராடிய சிக்காக்கோ நகரத் தொழிலாளர்கள் மீது ஆளும் முதலாளித்துவ அதிகார வர்க்கத்தின் ஏவல் நாய்களினால் வெறித்தனமாக நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அன்று உயிர்ப்பலியாகிய தொழிலாளர்களின் இரத்தம் இன்று முழு உலகையுமே சிவப்பாக்கிக் கொண்டிருக்கிறது.

முழு மனித குலத்தினதும் விடிவுக்குச் சாத்தியமான அத்தனை வழிகளையும் அடைத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிரான போர்ப்பறையை, வர்க்க பேதமற்றதோர் புதிய உலகை நிர்மாணிப்பதற்கென, 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்ற அறைகூவலின் மூலம் உலக அரங்கிற்கு வர்க்கப் புரட்சியை அறிமுகம் செய்துவைத்த கார்ல் மார்க்ஸின் தத்துவ ஒளி இன்று செங்கொடியின் கீழ் ஒன்று திரளும் தொழிலாள, பாட்டாளி வர்க்கத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. வர்க்க பேதமுள்ள சமுதாயத்தைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கும் முதலாளித்துவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசின் நலன்களுக்குத் துணைபோகாமல், ஒடுக்கப்பட்ட புரட்சிகர வர்க்கமாகிய தொழிலாள, பாட்டாளிவர்க்கச் சக்திகளை ஒன்றுதிரட்டி, புரட்சியை ஏற்படுத்துவதன் மூலமே தான், ஒட்டு மொத்தமான மனித குலவிடுதலையை ஒடுக்கு முறையற்ற, சுரண்டலற்ற சமுதாயத்தைக் கொண்ட புதியதோர் உலகை நிர்மாணிக்க முடியும் என்று, இன்றைய தொழிலாளர் தினத்தில் 'கண்' தனது இதழின் மூலம் முன்வைப்பதுடன், தனது புரட்சிகர மேதின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

ஆசிரியர்.

* உலகின் வேலை நேரத்தின் மூன்றில் இரண்டு பகுதி நேரம் பெண்கள் வேலை செய்கின்றனர். ஆனால் உலகின் மொத்த வருமானத்தில் பத்தில் ஒன்றையே பெறுகின்றனர்.

x ஐக்கிய அமெரிக்காவில் ஆணுக்கு ஒரு டொலர் சம்பளமாயின் பெண்ணுக்கு அறுபது சதமே கிடைக்கிறது.

x இங்கிலாந்தில் ஆண்களை விடப் பெண்களுக்கு 25% குறைவாகவே சம்பளம் வழங்கப்படுகிறது.

* தென் கொரியாவில் ஒரு மாதத்திற்கு 42 டொலருக்குக் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களில் எண்பது வீதமானோர் பெண்களே. இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் ஒரு நாளைக்கு 8-10 மணித்தியாலங்களும் மூன்றில் ஒரு பகுதியினர் 15 மணித்தியாலங்களும் வேலை செய்கின்றனர்.

x இலங்கையின் நெல்லுற்பத்தி மாவட்டங்களில் விவசாய வேலைகட்கு ஆண்கள் பெறும் சம்பளத்திலும் 38% குறைவாகவே பெண்கள் சம்பளம் பெறுகின்றனர்.

www.tamilarangam.net

## Lettre à l'éditrice

Nous recevons toutes des lettres fort tristes du Sri Lanka, qui ont l'odeur des mitraillettes et des maisons incendiées, qui nous annoncent la mort d'un ou d'une telle qui nous était cher "dans des circonstances tragiques," laissant entendre que ce fut un meurtre provoqué par les "forces de l'ordre" ou ses suppots.

Au mois de novembre dernier, je recevais la nouvelle de l'assasinat du Père MICHAEL RODRIGO, alors qu'il achevait de célébrer l'eucharistie en présence de deux religieuses dont l'une fut blessée et de deux jeunes femmes. Une décharge dans la tête. Il fallait que ce prêtre qui vivait parmi de petits paysans et qui disait la vérité, disparaisse. Ce prêtre était conscient du danger qui le menaçait, sa présence et ses paroles dérangeaient ceux qui détiennent le pouvoir. Il a parcouru ce même chemin que Jésus prit en montant à Jérusalem pour affronter ses juges et ses bourreaux. Temps de Carême, temps de la Passion s'ouvrant sur l'aube de la Résurrection.

Nous vivons une époque douloureuse pleine d'incertitudes. Ne nous replions pas sur nous-mêmes par crainte. Sachons passer au-delà des frictions de la vie quotidienne pour voir l'essentiel, c'est-à-dire, s'entraider pour réaliser notre vie de femme libre, ensemble. La solidarité est un absolu pour construire une société où chacune puisse avoir sa place. Il faut apprendre à faire refleurir l'espoir, même si l'horizon est sombre. Un proverbe anglais dit qu'il y a toujours une bande argentée -silver line- dans un ciel orageux. N'effaçons pas cette lueur, parce que notre amour-propre est froissé ou notre corps las du poids du jour. Si nous ne savons pas vivre en harmonie en pays d'exil, comment pouvons-nous songer à bâtir la paix dans notre terre natale ?

Sr Antoinette Forget



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னைத் தீண்டாதே

பூக்களை
புல்நுனிகளை
வருடி
வளைந்து நெளிந்து
என்னையும்....
இயற்கையின் வனப்புக்களோடு
புணர்ந்து
உயிர்ப்பூந்து...
உனக்குந் தான்
எதுவும் பேதமில்லையே,
மேடு
பள்ளம்
காய்ந்தவை
துளிர்த்தவை
இப்படி எதுவுமே....
உனக்கு
அன்னியமாகிப் போன
என்னை மட்டும்
தேடுகிறாயா ?
நல்லது,
உனக்கு அருகில்
மிக அருகில்தான்
நான் இருக்கிறேன்,
ஆனாலும்
பூக்களின் வாசனையையும்
துளிர்ந்த நீரின்
சுகந்தையும்

www.tamilarangam.net

எப்போது
தூக்கியெறிந்துவிட்டு
நீ —
பிணங்களின்
வாசனையையும்
சாம்பல்களையும்
சுமந்து வரத் தொடங்கினாயோ
அப்போதே,
அந்தக் கணமே
நான்
உன்னை வெறுத்து விட்டேன்
ஏ! தென்றலே ...
என்னைத் தீண்டாதே
உன்னை எண்ணி
எதிர்பார்த்த
அந்த நாட்கள் ....
நினைவுகளே போதும்,
நீ வருட
நான் தூங்கிய நாட்கள்
இனிக்கின்றன.
இப்போதைக்கு
அது போதும்,
முடியுமானால்
நீ புயலாகு
சூறாவளியாகு,
எல்லாவற்றையும்
அழித்துச் செல்,
புதிய விதைகளை
நான் தூவ வேண்டும்,
அதன் பின்

www.tamilarangam.net

பூக்களும்
புதிய மரங்களும்
பசிய புற்களும்
புன்னகை பூத்த
முகங்களும் தான் இருக்கும்.
அப்போது —
அங்கே
தவழ்ந்து விளையாடி
குளிர்ச்சியாக வா.
மீண்டும் உன் அணைப்பில்
நான் —
தூங்க வேண்டும்.
அது வரை ...

— அருந்ததி.

வாசகர்களே!

உங்கள் ஆக்கங்களைப் பிரசுரிக்க 'கண்' இதழ் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறது. சிறு கதைகள், கவிதைகள் கட்டுரைகள், சித்திரங்கள் எதுவாக இருந்தாலும் உங்கள் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:-

THE EDITOR,
ASSOCIATION DES FEMMES DU SRILANKA,
8, cité prost
75011 — PARIS.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைவிழா பற்றி ஒரு கண்ணோட்டம்:

இலங்கை மகளிர் சங்கத்தினது இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டமும், கலைநிகழ்ச்சிகளும் 29.11.87 அன்று 8, ரியூ லில் லெவெக் மண்டபத்தில் நடைபெற்றது. மக்களுள் உள்ளார்ந்து கிடக்கும் மன ஆற்றல்களை, திறமைகளை வெளிப்படுத்தும் நோக்கிலும், எமது கலை கலாச்சாரம் பேணப்படல் வேண்டும் என்ற நோக்கிலும், பெண்கள் விடுதலையின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும் இக்கலை விழா நிகழ்த்தப்பட்டது.

திருமதி. வெயில் அவர்கள் மங்கல விளக்கு ஏற்ற ஆரம்பிக்கப்பட்ட இக்கூட்டத்தில், முதலாவதாக, எம்மண்ணின் மக்கள் நலனுக்காக மரணித்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அடுத்து, பிரதம விருந்தினராக வருகை தந்த திருமதி. வெயில் அவர்கள் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். அடுத்து சகோதரி, திருமதி. ஜோதி நவரட்ணம், தமிழ் மொழியிலும், பிரான்சிய மொழியிலும் வரவேற்புரை வழங்கி கூட்டத்திற்கு வருகை தந்திருந்தவர்களை வரவேற்றார். அடுத்து தலைமையுரை, சகோதரி. திருமதி. ஷசியா - சாமித்தம்பியால் பிரான்சிய மொழியிலும், செல்வி. ஜெயக்குமாரி. நடராஜாவினால் தமிழ் மொழியிலும் நிகழ்த்தப்பட்டது. அதில் தம் மகளிர் சங்கத்தினது நோக்கத்தினையும், அதனை சிறந்த முறையில் செயற்படுத்த அதற்கு தேவைப்படும் மக்களின் ஆதரவின் அவசியத்தையும் எடுத்துச் சொன்னார்கள்.

அதனைத் தொடர்ந்து, சங்கைக்குரிய சகோதரி. அன்றனெற், திருமதி. லொங்கன் அவர்கள் தமது உரையை வழங்கினார்கள். அடுத்து கலைவிருந்து நிகழ்ச்சிகளை தமிழிலும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரெஞ்சு மொழியிலும் அறிவித்துக் கொண்டிருந்தார் சகோதரி - திருமதி - லக்ஷ்மி . கதிரகரன் . ஆனால் பிரதம விருந்தினர் உரை, சிறப்புச் சொற்பொழிவு ஆகியவற்றினை வழங்கும் போது அவற்றைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறுவதற்கு ஒரு மொழி பெயர்ப்பாளரை அவ்விடத்தில் நியமிக்கத் தவறிவிட்டனர். அவ்வுரைகளின் சாரத்தை பிரெஞ்சு மொழி தெரியாதோர் அறிய வாய்ப்பில்லாது போய் விட்டது.

தொடர்ந்து, சிறுமியரின் தீப நடனத்துடன் கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. சங்கத்தின் நடன ஆசிரியை திருமதி. பவானி. ராசு சங்கத்தினது மாணவிகளான தீப நடனம் புரிந்த இச் சிறுமிகள், சிறுமிகளுக்கேயுரித்தான பாவத்துடன் அழகாக நடனம் புரிந்தனர். அடுத்ததாக செல்வன் றெமிஜெலிட் 'ஆறுமுக நாவலர்' பற்றி சிற்றுரையாற்றினான். அச் சிறுவயதில் அவனின் பேச்சின் வன்மை அசர வைக்கிறது. எனினும், உலகப் பார்வையில் குறுகிய கண்ணோட்டம் கொண்ட ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரைப் பற்றிப் பேசுவதற்கு (அவன் (?)) தெரிவு செய்தது சரிதானோ? என்ற கேள்வி மனதில் தோன்றுகிறது. பாலபாடம் தந்த, தமிழ் மொழி வளர்த்துக் காத்த, இலக்கண, இலக்கியம் காத்த எம் ஆறுமுகநாவலர், . . . சாதி, மத வெறி கொண்டவராகவும் இருப்பதனால் - அவர் வழி நடப்போம் என்ற அச் சிறுவனின் உரை முடிவு மனதுக்கு நெருடலாகவே இருக்கிறது.

அடுத்து, செல்வி. சிவந்தி. மகேந்திரனின் தனி நடனம் நடைபெற்றது. தெளிவான முத்திரையுடன் தாளத்துடன் நடனமாடினார். நட்டுவாங்கம் (?) .. அதனைத் தொடர்ந்து செல்வி. தவியந்தி . நிர்மலதேவா மகாத்மா காந்தியைப் பற்றி பிரெஞ்சில் உரையாற்றினார். தொடர்ந்து கர்ணல் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சிக்குப் பின், மீண்டும் செல்வி - சிவந்தி - மகேந்திரனின் 'கௌத்துவ நடனம்' நடைபெற்றது. இவர் திருமதி - சாவித்திரி. நாயரின் மாணவி என்று அறிமுகப்படுத்தினார்கள். நட்டுவாங்கம்(?). அடுத்து சிறுமியரின் குழு நடனம் நடைபெற்றது.

அடுத்ததாக திருமதி. சாந்தி சத்தியதயாளனின் வயலின் இசைக்கச்சேரி நடைபெற்றது. சிறந்த நேரம் தனது வயலினின் நாத வெள்ளத்தால் எம்மைப் பரவசப் படுத்தினார் அவர். அத்துடன் சிலபாடல்களின் தாளம் பிசகாத துரித வாசிப்பு எம்மைப் புல்லரிக்க வைக்கிறது.

அடுத்து, செல்வி. ஜெனி காசிலிங்கத்தின் மயில் நடனம் நடைபெற்றது. திருமதி. வினித்தா சௌந்தரநாயகம், அவரை அந் நடனத்திற்கு தயார்ப்படுத்தி நெறியாள்கை செய்தார். மயிலின் அழகுத் தோகையுடன் அழகாக தாளம் பிசகாது ஆடும் இவர், கைமுத்திரை யிலும் சிறந்த கவனம் எடுத்திருக்கலாம்.

அடுத்ததாக சிறுவர் சிறுமியரின் ஓரங்க நாடகமாகிய பாரதியின் தீர்ப்பு' நடைபெற்றது.

பாரதியாரை கருவாக, தீர்ப்பை வழங்கும் நீதிபதியாக வைத்து, இத்தீர்ப்பை வழங்கினார், இந்நாடகத்தை தயாரித்து அரங் கேற்றிய இந்நாடகாசிரியர் குருநகர் ஜீவி.

மனித குலத்தின் துன்பத்தைத் துடைக்கும் சட்டதிட்டங் களை இயற்றவந்த, சட்ட மன்ற வல்லுனர் என மக்களால் போற்றப் படாத சட்டநிபுணர்களாக கவிஞர்கள் இருப்பார்கள் என்பதற்கிணங்க, பாரதியாரை நீதிபதியாக்கி இத்தீர்ப்பினை வழங்குகின்றார் குருநகர் ஜீவி. இக்கலைப்படைப்பானது, எமது சமூகம் சீர்திருத்தப்படல் வேண்டும் என்ற நோக்கில் ஆக்கப்பட்டதாக விளங்குகிறது.

ஔவையார், மகாத்மா காந்தி, இந்திராகாந்தி, செவிடு, தமிழ்த்தாய், குடியானவன், பொலிஸ், சேவகன் என 8 பாத்திரங்களை ஒரே களத்தில் நடமாட விடுகிறார். இவர்களின் மனுவிற்கு நீதி வழங்கும் நீதிபதியாக பாரதியார் அதே களத்தில் தோன்றுகிறார்.

www.tamilarangam.net

இனவெறி, சாதிவெறி, நிறவெறி கொண்டோரை இனம் கண்டு, எதேச் சாதிகாரத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்து – தமிழர்கள் உரிமைகளைப் பெறுவதற்கு போராட்டம் நடத்துகிறவர்களுக்குத் தேசியப் பற்றை வளர்த்த, இத்தகைய குணாம்சங்களைக் கொண்ட பாரதியார் மூலம் அக்னிமண்டலத்தில் பல தீர்ப்புகளை வழங்குகின்றார்.

சமுதாயத்தை சீரழிக்கும் குற்றவாளியை சமுதாயமே தண்டிக்க வேண்டும். குற்றம் செய்தோர் மனம் திருந்துமாறு சமுதாயத்தால் விலக்கப்படல் வேண்டும். பெண்களை இழிவு செய்வது, சிறுமைப் படுத்துவது போன்றன நீக்கப்படல் வேண்டும். மனித நீதி உயரவேண்டும். மனித நேயம் வளர வேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் தம் உரிமை வெல்ல வேண்டும். இந்திய அமைதிப்படை இடம் மாறல் வேண்டும். மகிமை பெற்ற பெண்ணினம் உருவாக வேண்டும். என்பன போன்றதும், புதுமைப் பெண்ணைப் பற்றி பெருமையுடன் பாடிய பாரதி, அச்சமும் மடமையும் அகற்றிய பெண்களை நாட்டின் கண் களாகவும், கடந்த காலத்தை நிகழ்காலப் படிப்பினையாக்கி, மகிமைப் பெற்ற பெண்ணினமாகத் திகழ பெண்களுக்கு வழிகாட்டும் படியும் சமுதாயத்திற்கு தீர்ப்பு வழங்குகின்றார்.

ஆழமற்ற அரசியல் பார்வை கொண்ட வெறும் சீர் திருத்தக் கருத்துக்கள் அடிப்படை மாற்றத்தை விளைவிக்க மாட்டா தவை. இவை ஆசிரியரின் மன விருப்பத்தை மட்டும் காட்டுவதுடன், அளவு மாற்றமே பண்பு மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற அடிப் படை விதியை மறுப்பதாகவும் அமைகிறது.

மேலும் அவர் அத்தீர்ப்பினை வெளிப்படுத்தும்பாணி இரசிகர்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. உதாரணத்திற்கு -- இரத்தம் சிந்தாது நாட்டுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தவராக ஆசிரியர் கருதும், அன்பைப் போதித்து, அகிம்சை சமத்துவம் பேசிய மகாத்மாகாந்தியும், அவசரகாலச் சட்டத்தினைப் பயன்

www.tamilarangam.net

படுத்தி, ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்த, எதேச்சாதி காரத்துடன் நடந்து கொண்ட இந்திரா காந்தியும், மக்களிடமிருந்து, அதாவது சமுதாயத்திலிருந்து தமக்குக் கிடைத்த துப்பாக்கிக் குண்டு பற்றி சம்பாதித்துக் கொள்கிறார்கள். தீர்ப்பில், சமுதாயத்தைச் சீர ழிக்கும் குற்றவாளிகளை சமுதாயமே தண்டிக்க வேண்டும் எனவும் கூறுகிறார். ஆனால் மகாத்மா காந்திக்கும், இந்திரா காந்திக்கும், துப்பாக்கி மூலம் அவர்களைக் குற்றவாளியாக்கி (வெவ்வேறு மனோ நிலையில்) தண்டனை கொடுத்ததாகக் கூறிக் கொண்டும், இம் மனித சமுதாயத்தின் அங்கங்களான அவ் இருவரும் செய்ததும் சரிதானா? சமுதாயத்தை சீரழிப்பவர் யாரென்பதையாவது இனம் காட்டியிருக்கலாம்.

இவ் ஓரங்க நாடகத்தினைத் தொடர்ந்து திருமதி லீலா - சண்முகதாஸனின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இறுதியாக எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக, பெண் விடுதலையின் அவசியத்தையும், அதனை மக்களுக்கு எடுத்துக் கூறுவதனையும் முக்கிய நோக்கமாகக் கருதும் இம் மகளிர் சங்கத்தின் சங்க அங்கத்தவர்களால் நடத்தப்பட்ட வில்லிசை இருந்தது. "பெண்கள் தெய்வங்கள் அல்ல" எனும் தலைப்பில் எமது பாரம்பரியக் கலையாம் வில்லிசை மூலம், வில்லிசைக்கேயுரிய அமைப்பு மாறாது — திருமதி. ஜோதி. நவரட்ணம் கதையாகக் கூறினார். திருமதி. காந்தி. சத்ய தயாளன், திருமதி. லஷ்மி. கருணாகரன், திருமதி. கவிஸ்ரா. சிங்க நாயகம், திருமதி ஆசியா சாமித்தம்பி, செல்வி. ஜெயக்குமாரி. நடராஜா, செல்வி. வசந்தி - யோகராஜா ஆகியோரும் இதில் பங்கு பற்றினார்கள்.

இக் கலைப்படைப்பானது, ஒருபுறம் மரபில் இருந்து - மனிதனின் கலாச்சாரப் பாரம்பரியம் இறந்தகாலத்தை மாற்றி எதிர் காலத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலிருந்து தோன்றிய படைப்பாகும். இப்படைப்பினை உட்பொருளை ரசிகர்கள் எளிதாக அறியக் கூடிய வகையில் 'குறியீட்டு' உத்தியைக் கையாண்டுள்ளார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படைப்பின் ஆசிரியர் அருந்ததி.

எம் எல்லோருக்கும் பரிச்சயமான புராண மரபுக் (கற்பின) கதையான இராமாயணத்தின் ஒரு பகுதியில் (ராமர்) சீதையை ஒரு குறியீடாகக் கொண்டு —

இன்றைய எம் சமூகத்தில் மனிதம் கூறுகளில் ஒன்றான பெண்கள் எவ்வாறு இரண்டாம் பக்கத்திற்கு ஒதுக்கப்பட்டார்கள் என்பதையும் -

இச் சமூகத்தை 'பெண்நிலைப்பாடு' பற்றிய கருத்தியல்களால் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள இரண்டாம் பட்ச நிலையை அவர்கள் உணரக் கூடியதாகவும் —

பெண்களுக்கு, அவர்களது முழுமையான விடுதலை பற்றிய அறியாமையை உணர்த்தியும் -

ஆண்களின் மரபு வழியான அதிகாரத்த ஆண் ஆதிக்கத்தினையும், அதனுள் பெண்ணினம் எவ்வாறு ஒடுக்கப்பட்டாள் என்பதையும் -

இவ்வாறு பேசுமுள்ள சமுதாயத்தில் பெண்களின் ஒடுக்கு முறையின் அம்சங்களையும் - இவற்றுள் பெண்களின் போராட்ட குணம்சங்கள் முற்றாகத் தகர்க்கப்படுவதனையும் இனம் காட்டி -

பெண் விடுதலை பற்றி பெண்களே இதுவரை கொண்டிருந்த பார்வையை அகலிக்கக் கூடியதாக —

பெண்களின் அடிமைத் தனத்திற்கு வித்திடுகின்ற பண்டைய இலக்கியங்களிலுள்ள 'பெண்நிலைப்பாடு' பற்றிய பெண்களின் போராட்டக் குணாங்களைச் சிதைக்கும் கருத்தியல்களைப் புறக்கணிக்கும் நோக்கிலும் படைக்கப்பட்ட-

பெண்களின் விடுதலைப் போராட்டத்திற்கு மிக முக்கியமானது எனக் கருதப் படவேண்டிய இக் கலைப் படைப்பின் வீச்சை, ரசிகர்கள் மிக இலகுவாக அறியக் கூடிய வகையில் கூறியுள்ளார் படைப்பாளர் அருந்ததி.

மனிதத்தன்மை, மனிதாபிமானம் துறந்த இறுக்கமான விதிகள், சம்பிரதாயம், மரபு சார்ந்த அடிமைத் தனங்களி படர்கின்ற மனித மனம் - மூல அர்த்தங்களைப் பழக்கத்தால் தொலைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிக்கலை ஏற்படுத்தி விடுகின்றது. இதுவே மனிதனின் வளர்ச்சிக்குப் பெரிய தடைகள். இத்தகைய மனோநிலையில் காணப்படும் எமது சமூகத்தின் பாதாளச் சிறைக்குள் சிக்குண்டு, மனித சமூகங்களில் இரண்டாம் பட்சமாக ஒதுக்கப்பட்ட எம் பெண்களின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காகவும் இத்தடைக் கற்களைத் தகர்க்கும் தார்மீக நோக்கில் அமைந்ததாகவும் இப் படைப்பு காணப்படுகிறது.

சுரண்டும் வர்க்கமாகிய ஆளும் முதலாளித்துவ வர்க்கமும் அதன் பிரச்சாரச் சாதனங்களும் பெண்கள் உழைப்பைச் சுரண்டுவதற்காகவும், அவர்கள் சிந்தனை பெற்று விழிப்படைந்து விடக் கூடாது என்பதற்காகவும், அவர்களுக்கு எதிர்ப்புணர்வு இல்லாது போய் விட வேண்டும் என்பதற்காகவும் கட்டிக் காத்துக் கொண்டு வரும் - நம்பிய நிறுவன அமைப்பு, 'பெண்ணிலைப்பாடு' பற்றிய கருத்தியல்களையும் அதன் அபத்தங்களையும் இனம் காட்டிய ஆசிரியர் - அதில் வன்முறையற்ற கருத்தியலாக - பெண்கள் உழைப்பைச் சுரண்டும் நோக்குடன் - அவை கட்டிப் பாதுகாக்கும் மதங்களில் காணப்படும் பெண்ணிலைப்பாடு பற்றிய கருத்தியல்களால் பெண்கள் போராட்டக் குணாம்சங்கள் மழுங்கடிக்கப் படுவதையும் எடுத்துக் கூறத் தவறி விட்டார். இருந்தும் -

தமது முழுமையான விடுதலையற்ற அறியாமை நிறைந்த செல்வது தமது அடிமை நிலையை உணர்ந்த பின்பும் - பழக்கத்தால் அதிலிருந்து வெளியேற விரும்பாது தம்மைத் தாமே ஒடுக்கிக் கொண்டு போகும் எம் பெண்களுக்கு - அவர்கள் பெண் விடுதலை பற்றிக் கொண்டிருக்கும் பார்வையை இக் கவிப்படைப்பின் மூலமாக அகல நோக்க வைக்கிறார் அருந்ததி.

பெண்கள் விடுதலை சாத்தியமாகும் சமுதாய அமைப்பின் அடிப்படை மாற்றத்தினை வலியுறுத்தி, இறுதியில் முதலாளித்துவ சமுதாய அமைப்பையே மாற்றி அமைக்கும் - வர்க்க பேதமற்ற, அரசியல் பொருளாதார சமத்துவத்தில்தான் பெண் விடுதலை சாத்தியமாகும் என ஆசி-

www.tamilarangam.net

நிலையை வெளிப்படுத்தி - பெண்களின் விடுதலை வேட்கைக்கும் உரமூட்டு கிறார்.

இவ்வில்லிசையில் இவற்றையெல்லாம் வெளிப்படுத்தும் வகை யிலமைந்த பாடல்கள் - கேட்போருக்கு உணர்வு ரீதியில் மட்டும் தாக்கத்தினை ஏற்படுத்தாத சிந்தனையைத் தூண்டும் கவித்துவமான பாடல்கள் - பாடல்களின் கருத்தை ரசிகர் மனதில் பதிக்கக் கூடிய வகையில் அவற்றின் இசையமைப்பு. பொருத்தமான இடங்களுக் கேற்ப பொருத்தமான மெட்டுக்கள் - இராகங்களுடன் தேவைக் கேற்ப ஏற்ற இறக்கங்கள் - விரைவு தணிவுகள். அதிலே லயிக்கக் கூடியதாக இருக்கிறது.

சில இடங்களில் சில வித்தியாசமான உத்திகளைக் கையாண்டுள்ளார் ஆசிரியர். உதாரணத்திற்கு - பாடல் இன்னும் தொடரப் போகிறது என்று ரசிகர்களை எண்ணும்படி பாடலைப் பாடவைத்து, திடீரென நிறுத்தி அவசியமாகச் சொல்ல வேண்டியவற்றைச் சொல்கிறார். அவ்விடத்தில் அதை நன்றாக உற்றுக் கேட்கப்பட வேண்டும் என்ற நோக்கில்.

வில்லிசையைக் கதையாகக் கூறும் திருமதி. ஜோதி. நவரட்ணம் படைப்பாளர் அருந்ததி கூறியவற்றை ஆத்மார்த்தமாக உணர்ந்து சொல்வது அவர் குரலில் வெளிப்படுகிறது. தெளிவான உச்சரிப்பு, தேவையான இடங்களில் சற்று அழுத்தம், சொல்பவற்றை வலுவூட்டுவதற்காக.
பாடும் போதும் இதேமுறையில் பொருளுணர்ந்து சற்று அழுத்தி அவற்றை வலியுறுத்தும் வகையில் பாடுகிறார்.
தாளலயத்துடன் அசைவு, அழுத்தம், பாவம் நிறைந்து பாடுகிறார். கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.
அவருக்கு உறுதுணையாக வில்லிசையை மேலும் மெருகூட்டியுள்ளார் திருமதி. சாந்தி. சத்தியதயாளினி - அவரது கனிந்த குரலில் பாவத்துடனும் அசைவுடனும் பாடல்களைப் பாடி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடையில் அதிகப் பிரசங்கித்தனமாக கேட்கப்படும் விகடத்தனமான கேள்விகளிலும் அர்த்தம் இருக்கிறது. சிரிப்பூட்டினாலும் சிந்திக்க வைக்கிறார் திருமதி. லஷ்மி. சுதாகரன். ([illegible]) கேள்விகள் கேட்கப்படும் போது சில சில இடங்களில் ஒருவகை செயற்கைத்தனம் தெரிகிறது. பின்பாட்டுப் பாடுவோர் இனிமையுடன் வலுவூட்டினார்கள் பாடலின் கருத்துக்கு.

வயலின், தபேலா, ஓர்கன் வாத்தியக்காரரின் 'ஆவர்த்தன இசை' ரசனையைத் தூண்டுவதுடன் ரசிகர் கவனத்தை ஒருமுகப் படுத்துகிறது. ஓர்கனிற்குப் பதில் ஹார்மோனியமும், மிருதங்கமும் இருந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். இல்லாத போதும் பெரும் குறையாகத் தோன்றவில்லை.

இது எம் பெண்களின் விடுதலை சாத்தியமாகும் உன்னத சமுதாயம் உருவாக வழியமைக்கும் ஒரு சிறந்த கலைப்படைப் பாக இருப்பதனால் மிக முக்கியமானது எனக் கருதப்பட வேண்டிய ஒரு ஆரோக்கியமான கலைப்படைப் பாகும்.

மொத்தத்தில் இச் சங்கத்தினர், எமது கலை, கலாச்சாரம் பேணப்படல் வேண்டும் என்ற நோக்கில், இவர்களால் நிகழ்த்தப்பட்ட கலைநிகழ்ச்சிகளில், ஒரே நாளில், ஒரே மேடையில் வேறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கும் நிகழ்ச்சிகளை (படைப்புக்களை) நடத்தியதனைப் பார்க்கும் போது, நிகழ்ச்சிகளைத் தெரிவதில் இவர்கள் அதிக கவனம் செலுத்தவில்லையோ? அன்றில் போதிய அவகாசமின்றித் தெரிவு செய்யப்பட்டவையோ? என்ற சந்தேகம் எழுகின்றது. எனினும் இவ் அந்நிய மண்ணில் மிகுந்த தன்னம்பிக்கையுடன் செயலாற்றிவரும் இம் மகளிர் சங்கம், இக் கலைநிகழ்ச்சிகளை நடத்தியது ஒரு பாராட்டத்தக்க விசயமாகும்.

சந்யா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியத் திரைப்படங்களும் அவற்றின் வர்க்கக் குணாம்சமும்.

இருபதாம் நூற்றாண்டின், மிகப் பரந்துபட்ட மக்களை உலகளாவிய ரீதியில் ஈர்த்துக் கொண்டதும், விஞ்ஞான பூர்வமானதுமான ஒரு கலைவடிவமாகத் திகழும் திரைப்படமானது, வெறுமனே ஒரு பொழுது போக்குச் சாதனம் என்றவரையறைக்குள் வைத்துப் பார்க்கப் படும் ஒரு துர்ப்பாக்கிய நிலையினை எம்மவர் பலரிடத்திலும் இன்று அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இக் கருத்து நிலையின் தோற்றுவாயாக இந்தியத் தமிழ்த் திரைப்படங்களின் அதிக பட்ச பரிச்சயமும், மொழி ரீதியிலான அந்நியோன்னியத் தன்மையும், ஏனைய மொழித் திரைப் படங்களின் பரிச்சயமில்லாத மொழி ரீதியில் அந்நியப் பட்ட, அல்லது பார்வைக்கு அருகிக் காணப் படுவதும், ஆகிய இவைகளே மேலோங்கிக் காணப் படுவதால் தரவேறுபாட்டினைக் கருத்தில் கொள்ள மறுக்கும் இயல்பான அறிவுக் குறைபாடென எம்மவர் மீது முழுப் பொறுப்பையும் சுமத்தி விடல் சாத்தியமில்லை. எனினும் இது பற்றியதோர் தெளிவு மிக அவசியமானதே.

அஸ்தமித்துப் போன "கலை கலைக்காகவே" எனும் பழைய வரட்டுத் தத்துவத்திற்காக அழுது புலம்புபவர்கள் இன்னும் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் கால வெள்ளம் என்னவோ இவற்றையெல்லாம் அடித்துக் கொண்டு சென்று பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்பதுதான் உண்மை. கலை மக்களுக்காக மக்களால் இரசிக்கப் படுபவை என்பதை இன்னும் மனங் கொள்ளாத தவறுபவர்களாலேயே கலை இலக்கியத்தின் பல கூறுகளும் இன்று பாழடிக்கப் படுகின்றன. இந்த வகைக்குள் தான் இந்தியத் திரைப்படங்களும் அடங்குகின்றன என்பது இங்கு கவனத்தில் கொள்ள

வேண்டியுள்ளது. (மலையாளம், வங்காளி தவிர்ந்த இந்தியாவின் ஏனைய மொழித் திரைப் படங்களில் பெரும்பாலானவையும் இவற்றுள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.)

புறத் தோற்றத்தின் பிம்பங்களை உள்வாங்கிப் பிரதிபலித்த புகைப் படக் கலையின் மறுமுறை வளர்ச்சியாக திரையில் அசையும் நிழற்படங்களாகவும், பின்னர் அவை பேசும் தன்மையைப் பெற்றனவாகவும் ஒரு பரிணாம வளர்ச்சியை அடைந்த திரைப்படமானது மனிதனை ஆச்சரியத்தில் மூழ்கடித்த ஆரம்பக் கட்டத்தில் ஒரு அற்புதமான கலாவடிவத்தை தன்னுள் அடக்கிய விஞ்ஞான பூர்வமான சாதனம் என்பதை பெரும்பாலானோர் உணர்ந்து கொள்ளவில்லை. அப்போது அது மனிதனுக்கு ஒரு இன்ப அதிர்ச்சியையும ஆச்சரியத்தையும் கொடுத்த ஒன்றாகவே விளங்கியது. ஆனால் பின்னர் ஏற்பட்ட கலை இலக்கிய மேதைகளின் திரையுலகப் பிரவேசமானது பிரமிக்கத் தக்க சாதனைகளை திரைப்படத்தின் மூலம் சாதித்துக் காட்டியது. இதன் மூலம் மக்கள் தொடர்புக் கலைச் சாதனங்களில் முதன்மையிடம் வகித்த சினிமாவானது யதார்த்த பூர்வமான ஒரு கலைவடிவமாக தன்னை இனம் காட்டியது. ருஷ்யா, செக்கோசிலோவேக்கியா, கங்கேரி, ருமேனியா மற்றும் இந்தியாவின் கேரளம் வங்காளம், இலங்கை (சிங்கள மொழியில் சில திரைப்படங்கள்) ஆகிய நாட்டுப் படங்களை இவற்றிற் கெடுத்துக் காட்டுகளாகக் குறிப்பிடலாம். அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய நாடுகள் தொழில் நுட்ப ரீதியாக மாபெரும் சாதனைகளை திரைப்படத்தின் மூலம் நிகழ்த்திக் காட்டின.

கோமொலி, நர்போனி என்கின்ற பிரபலமான பிரான்ஸ் நாட்டுத் திரைப்பட விமர்சகர்களின் கூற்றுப்படி, "சினிமாப் படம் என்ற தயாரிப்பு எந்த பொருளாதார அமைப்பில் தயாரிக்கப் பட்டுக் காட்டப் படுகின்றதோ அந்த அமைப்பின் சித்தாந்தத்தால் நிர்ணயிக்கப் படுகிறது". ஏனெனில் சினிமாப் படம் என்பது ஒரு பொருளாதார அமைப்பில் தயாரிக்கப் பட்ட பொருள். உழைப்பும்

www.tamilarangam.net

பணமும் செலவழிக்கப் படுவதால் ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்படும் நிறுவனம், நுழைவுச் சீட்டுக்கள் மூலம் விற்கப் படுவதால் பண்டமாற்று மதிப்புள்ள வியாபாரப் பொருள். வியாபாரப் பொருள் கடைசியாக நிர்ணயிக்கப் படுவது அதன் வருமானம், வினியோகம், விளம்பரம் முதலியவைகளால். ஆகவே அமெரிக்க, ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் தயாரிக்கப் படும் திரைப் படங்களைப் பொறுத்தவரை அவற்றை நிர்ணயிக்கும் சித்தாந்தம் முதலாளித்துவமே ஆகும். எனவே சினிமாப் படம் இந்த அமைப்பின் சித்தாந்தத்தால் நிர்ணயிக்கப் படுவதால் எப்பொழுதுமே அரசியல் சார்புடையது என இவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

இப்பொழுது நாம் இவர்களின் கோட்பாட்டினைக் கொண்டு இந்தியத் திரைப்படங்களை பரிசீலிப்போமாயின் மேற்பார்த்த உண்மை புலப்படுவதனை அவதானிக்கலாம். வியாபாரச் சந்தையிலே போட்டிக்கு விடப் படும் ஒரு பண்டமாக திரைப்படம் மாற்றப்பட்டதால் அது முதலாளிகள் கையிலே எளிதாகச் சிக்கிவிட்டது. எனவே முதலாளித்துவ அரசையும், அதன் நிறுவன அமைப்புக்களையும் கட்டிக் காக்கக் கூடியதான நீதி போதனைகள், வர்க்க சமரசம், பெண்ணடிமைத்தனம் என்பவற்றையே கருவாகக் கொண்ட திரைப்படங்களாக அவை உருவாகுவதை தவிர்க்க முடியாதுள்ளது. இத்தகைய அம்சங்களை முற்றும் முழுதாக இந்தியத் தமிழ்த் திரைப் படங்களில் காணலாம். திராவிட பாரம்பரியம், பழம் பெருமை, நீதி போதனைகள், பெண்ணடிமைத்தனம், வர்க்க சமரசம், மதம் இவற்றோடு _

வர்க்க நலன்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கான போதனைகள், அரசியல் பதவி இலாபம் கருதியதான 'ஹீரோயிசம்' என்பனவைகளை உட்கொண்டு வெளிவரும் தமிழ்த் திரைப்படங்களின் தரநிர்ணயம் 'சினிமா வெறும் பொழுது போக்குச் சாதனமே'

www.tamilarangam.net

எனும் கருத்திலிருந்து மாற்றுக் கருத்துக்குச் சாதாரண பார்வையாளரை இட்டுச் செல்லாது என்பது மறுக்க முடியாத உண்மையே.

தேர்ந்த சூழலுக்கு முகம் கொடுக்கும் கலையம்சம் பொருந்திய முற்போக்கான திரைப்படங்களை வங்காளம், மலையாளம் ஆகிய இந்திய மொழிகளில் பெரும்பான்மையாகக் காணலாம். இந்திய திரைப்படங்களை உலகதரத்திற்கு உயர்த்திய இயக்குனர்கள் சத்யஜித்ரே, மிருணாள் சென், ஷியாம்-பெனகல், அடூர் கோபால கிருஷ்ணன் ஆகியோரது வரிசையில் தமிழில் எவரையுமே சேர்த்துக் கொள்ள முடியாத அவலம் மிகவும் வருந்தத் தக்கதே.

தமிழில் சிறந்த இயக்குனர்கள் இருந்தும் ஆரோக்கியமற்ற அரசியல் பொருளாதார சூழ்நிலையும், கட்டிக்காக்கப் படும் நிலப்பிரபுத்துவத்தின் எச்சங்களும், முதலாளித்துவ பொருளாதார நிலைப்பாடும், சந்தை விதிகளுக்கமைய ஒட்டு மொத்தமான முதலாளித்துவ சித்தாந்தத்தை பிரதிபலிப்பதனுள் அதற்குள் கட்டுப்பட்டுப் போக வேண்டிய நிர்ப்பந்தம் திரைப்பட விநியோகஸ்தர்களினதும், தயாரிப்பாளர்களினதும் அத்தகைய இயக்குனரின் தலைமேல் அமத்தப் படுகிறது. பொருளாதார நலன்களுக்காக அவர்களும் அதற்குக் கட்டுப்பட்டுப் போகின்றனர். ஏனெனில் இவற்றை மீறிய சில இயக்குனர்கள், குறிப்பாக ருத்திரையா ('அவள் அப்படித்தான்' எனும் திரைப்படம் எடுத்தவர்) மகேந்திரன் (முள்ளும் மலரும், உதிரிப்பூக்கள், பூட்டாத பூட்டுக்கள் ஆகிய திரைப்படங்களை இயக்கியவர்) ஆகியோரின் வர்த்தக ரீதியிலான வீழ்ச்சி, ஏனைய திரைப்பட இயக்குனர்களை அதிக, கலைப் பயன் கருதிய நிலைப்பாட்டிலிருந்து விலகச் செய்தது என்பது ஆச்சரியப் படத்தக்க விடயமல்ல. எனவேதான் இவர்களால் தொடர்ந்தும் முதலாளித்துவ சந்தை விதிகளுக்கமைந்த சினிமா மசாலாக்களை

www.tamilarangam.net

தயாரிக்கப் படுகின்றன.

தொழிற்ப் பிரச்சனைகளுக்கு கலைவடிவம் கொடுக்கும் தரமான திரைப்படத்தை தமிழில் காண முடியாததற்கு இவ்வாறு சினிமாவானது முதலாளித்துவக் கரங்களுக்குள் முடங்கிப் போனதும், சமூகப் பிரக்ஞையுள்ள கலாபூர்வமான திரைச் சிருஷ்டிகளுக்காக ஆதங்கம் கொள்பவர்களின் பொருளாதார ரீதியிலான காரணங்களுமேயாகும். ஏனெனில் மிகக் குறைந்த முதலீட்டைக் கொண்டு தயாரிக்கப்படக் கூடியதான திரைப்படமானது வர்த்தக ரீதியாக போட்டிச் சந்தையில் நிறுத்தப் பட்டதால், அதிகளவு முதலீட்டில் அது உருவாகத் தொடங்கியது. பெரும் பொருட் செலவுகளில் பெரிய பெரிய அரங்குகளை நிர்மாணித்து, அதிலே கனவுக் காட்சிகளை அமைத்து யதார்த்த நிலைக்குப் புறம்பான செயற்கைக் காட்சிகளின் மூலம் பார்வையாளருக்கு உண்மையை மறைத்து, ஒரு பொய்யான உலகத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று, அதன் மூலம் அவர்களது சிந்தனையை வர்க்க உணர்வை மழுங்கச் செய்து தமது இலாபங்களைப் பெருக்கிக் கொள்ளும் முதலாளிகளின் ஆக்கிரமிப்பில் இருந்து சினிமாவை மீட்டெடுப்பது என்பது பெரும் சிரமமெனினும் அவசியமானதும் அவசரமானதும் கூட. ஏனெனில் தமது வர்க்க நலன்களைத் தக்க வைத்துக் கொள்ளும் முதலாளித்துவ சிந்தனைவாதிகளால், மக்களை சுலபமான வழியில் சென்றடையும் சாதனமாகிய சினிமாவானது பாழடிக்கப் படுவதுடன் சமுதாய யதார்த்த நிலை மறைக்கடிக்கப்பட்டு, வர்க்கப் போராட்ட முனைப்புக்களும், சிந்தனைகளும் மழுங்கடிக்கப் பட்டு, நிலப் பிரபுத்துவ எச்சங்களையும் முதலாளித்துவ நலன்களையும் கட்டிக் காப்பதற்கென - மக்களை - அவர்களை அறியாமலேயே - அதற்காக பயிற்றுவித்து தயார் செய்யும் அபாயம் நிகழ்ந்து கொண்டேயிருக்கிறது. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ் நாட்டின் முதலமைச்சர் ஆனதும், ஜெயலலிதா அதற்காக இன்று அந்த பிரயத்தனம்

www.tamilarangam.net

எடுத்துக் கொள்வதும், அண்ணாத்துரை, கருணாநிதி போன்றவர்கள், உழைக்கும் மக்களினது வர்க்க உணர்வை மழுங்கடித்து இன உணர்வைத் தூண்டிய தமது பிற்போக்கான அரசியலுக்காக சினிமாவைப் பயன்படுத்தியதும், இன்னும் வேறு உலகெங்கிலும் காணப்படாத வகையில் நடிகர் நடிகையருக்காக ரசிகர் சங்கங்கள் பெருமளவில் அமைக்கப்பட்டதும், நடிகர், நடிகைகளுக்கு பெரிய அளவில் விழா எடுத்து அவர்களை ஒரு அபரிதமான நிலை மதிப்பீட்டிற்கு உட்படுத்தி தமிழக மக்கள் செய்யும் செயல்களும் இவற்றை நன்கு நிரூபிக்கின்றன.

எனவே இன்றைய சினிமாவுக்கெதிரான ஒட்டு மொத்தமான எதிர்ப்பை எல்லா வழிகளிலும் தெரிவிப்பதுடன், உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் வகையில் அதற்கான அனைத்து வழிகளையும் கையாள வேண்டும். மக்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்வு சமுதாய மாற்றத்தை வேண்டிய முன்னெடுப்புக்களுக்கு அவர்களை இட்டுச் செல்லும். அப்போது கலை, இலக்கியங்களின் சகல வடிவங்களும் புது மலர்ச்சியும் செழுமையும் அடையும். சமுதாய அடித்தளமாகிய பொருளாதாரத்தில் மாற்றம் நிகழும் போது சமுதாய மேற்கட்டுமானமாகிய அரசு, சட்டம், நிறுவனம், கருத்தியல்கள், கலை இலக்கியங்கள் யாவும் மாற்றமுறும் என்பது வரலாற்று விதி.

மனிதனின் உழைப்பிலிருந்து தோன்றிய கலையானது உழைப்பவர்களின் நலன்களுக்கு பாதகம் விளைவிக்கும் பட்சத்தில் ஒட்டு மொத்தமாக அவை நிராகரிக்கப் பட்டு, உழைப்பவர்களின் புதிய சித்தாந்தத்தினால் தீட்டப்படும் கலாபூர்வமான சிருஷ்டிகள் அதே உழைக்கும் மக்களினால், கலைஞர்களினால் - பிரசவிக்கப்படும் என்பது மறுக்கப்பட முடியாத வரலாற்று உண்மை.

— அருந்ததி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலை இலக்கியத்தில்

# ஒரு படைப்பாளியின் பங்கு

M.R. வசந்தி.

கலை மனிதனால் படைக்கப்பட்டது. மனிதன் ஒரு சமுதாயப் பிராணி. தன் தேவைகளுக்காக சமூகமாக வாழ வேண்டிய கட்டுப்பாட்டில் உள்ளவன். அவன் தான் கண்டு கேட்ட அனுபவங்களை சமுதாயத்தோடு பகிர்ந்து கொள்கிறான். ஒவ்வொரு மனிதனிடமும் படைப்பாற்றல் உள்ளது. அது அவனது உழைப்போடு ஒன்றியது. தன் உள்ளுணர்வுகளுக்கும் - அனுபவம் மூலம் ஏற்பட்ட உணர்வுகளுக்கும் வடிவம் தரும் ஆற்றல் அவனுக்கு உண்டு. அத்துடன் மற்றவர்களது படைப்புக்களைப் புரிந்து சுவைக்கும் அழகுணர்வும் மனிதனிடம் மட்டுமுள்ள சிறப்பியல்பாகும்.

விலங்கு அடிமை நிலையிலிருந்து மனிதன் நிலத் தீர்த்த அடிமையாகி, கூலி அடிமையாகி, அதிலிருந்து விடுபட்டு சுதந்திர உழைப்பாளியாக மாறும் வளர்ச்சிப் போக்கைப் பிரதிபலிப்பது சமூக விஞ்ஞானமாகும். இந்த வளர்ச்சிப் போக்கில் மனிதனை, மேலும் வளர்ச்சியடையச் செய்வதற்கு கலை இலக்கியம் உந்து சக்தியாக வேண்டும்.

கலைஞனுக்கு ஒரு சமுதாயப் பணி உள்ளது. சமுதாய வளர்ச்சியை நோக்கி அவன் ஆக்க பூர்வமாக தன் அனுபவ உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் போது அவன் உயர்வடைகிறான்.

மனிதன் உற்பத்திக் கருவிகளை கூர்மையாக்கி தன் புறநிலைத் தேவைகளுக்காக உற்பத்தியைப் பெருக்குகின்றான்.

www.tamilarangam.net

அகநிலையை; அக உணர்வுகளை, அநுபவ உணர்வுகளை கலைவடிவ மாக வெளிக் கொணர்கிறான். வேலைப் பிரிவினை ஏற்பட்ட பின் னர் உற்பத்திக் கருவிகளைச் செய்வதும், கலைவடிவம் படைப்பதும் ஒரு சிலரின் ஆதிக்கத்தில் வந்தன.

உற்பத்தி கருவிகளின் வளர்ச்சியோடுதான் கலைகளும் வளர்ச்சியடைகின்றன. கருவிகள் வளர்ச்சி பெற உபரியாக உற்பத்தி செய்ய முடிந்தது. அன்றாட தேவைகள் நீங்க ஓய்வு கிடைத்தது. அவ் வேளை கலையும் வளர்ந்தது.

இன்று வெளிவரும் கலை இலக்கியப் படைப்புக்கள் இன்றைய சமுதாய அமைப்பை அப்படியே ஏற்றுக் கொள்கின்ற கோட்பாடுடைய கலை இலக்கியமாகும். இது எம் மாற்றத்தினையும் விரும்பாத பிற்போக்கான தன்மையைக் கொண்டவை. இரண்டாவது இன்றைய சமுதாயத்தை ஏற்றுக் கொள்ளும் அமைப்பில் சிற்சில சீர்திருத்தங்களை வேண்டுவதாகும். ஓரளவு சமுதாய உணர்வும் முற்போக்கு எண்ணம் கொண்டவர்களிடையேயும் இப்போக்கை காணலாம். அடுத்தவகையானது புதிய சமுதாயத்தை நோக்கிய கலைப்படைப்பாகும். இவை சமுதாயத்தை அதன் வளர்ச்சிப் போக்கில் சித்தரித்து வர்க்கப் போராட்டத்தை முன் வைக்கும் படைப்பாகும்.

இலக்கியத்தின் தரத்தை கனமாக்கி, இறுக்கி சமூக உணர்வுகளின் கருத்து லயத்தோடு, மானுடத்திற்கு இன்றி யமையாத நம்பிக்கை என்னும் கனலைக் கிளறிவிட்டு பளிச் சென்று மின்னுவதுதான் சிறுகதை.

மனிதனின் சமகால வாழ்க்கையை பிரதிபலிக் கும் அவலத்தையும் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. அவலத் தைக் காட்டும் போது, அவலத்தின் காரணத்தையும் காட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டும். இவற்றையும் விட மனிதனுக்கு எதிர்காலம் பற்றி மனிதகுலத்தின் எதிர்காலம் பற்றி ஒரு நம்பிக்கையை ஒரு உற்சாகத்தை மறைமுகமாகவேனும் அது அளிக்க வேண்டும். இது இலக்கியத்தில் மட்டுமல்லாது மற்ற எல்லாக் கலைகளிலும் வெளிப்பட வேண்டும்.

சிறுகதைகளில் கலை அம்சம் என்பது இனம் பிரித்துக்காட்ட முடியாத உயிர்த்தத்துவம் போன்றது. அதன் ஆளுமை அக்கதை முழுவதும் இனிய மணம் போல வியாபித்து நின்று நம்மை பரவசப்படுத்தும். சமுதாயத்திலும் மனித வாழ்விலும் உள்ளூறி நின்று மனித வாழ்வை குலைத்துக் கொண்டிருக்கும் பிரச்சனையை ஒரு எழுத்தாளன் எவ்வாறு காண்கிறான் என்பதை அவனது படைப்புக்கள் நமக்கு உணர்த்தும்.

இலக்கியம் மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதாக இருக்கும் பொழுதுதான் உயர்வை அடைகிறது. "இலக்கியத்தின் ஆதாரம் வாழ்க்கை, வெறும் கற்பனை அல்ல. அதன் ஊற்று மனித வாழ்விலிருந்துதான் சுரக்கிறது" என்கிறார் பிரேம் சந்த்

இன்று நமது விடுதலைக் குரல்கள் கண்ணி வெடிகளாகவும், கவிதைக் கண்ணிகளாகவும் ஆழம் பெறுகிறதை காணலாம். மக்கள் திரளாக உணரப்பட்டு, விடுதலை வேட்கை பரவலாகக் கிளர்ந்தெழுவதற்கு முன்பாக, ஒடுக்கு முறையின் ஆரம்ப நிலைகளிலேயே அபாயத்தை இனங்கண்டு கலைஞர்கள் குரலெழுப்பத் தொடங்கிவிடுவார்கள். இவர்களின் இந்தக் குரல்களே பல்வேறு படிகளினூடாக விடுதலைப் போராட்டமாகப் பரிணாமம் அடைகிறது. இந்த பரிணாமத்திற்கு கலையும் இலக்கியமும் புதிய வடிகால்களை அமைக்கும். "கலை சித்தாந்த உள்ளடக்கம் கொண்டது. கலையும் அரசியலும் வெவ்வேறு மட்டங்களில் பணி புரிகின்றன" என்பது லெனின் கூற்று. உண்மையை அலசும் துணிவும், மாற்றம் காணவேண்டிய விழைவும், வருங்காலம் பற்றிய நம்பிக்கையையும், நிகழ்காலப் பிரஞ்ஞையும் சக்தி வாய்ந்த படைப்புக்களைத் தோற்றுவிக்கும் என்பதில் ஐயமில்லை.

www.tamilarangam.net

# எங்கள் சமூகமும் பெண்களும்

சுமங்களா - சிவாமணி

''பெண் விடுதலை; பெண்களுக்கு விடுதலை'' என்று குரலெழுப்புபவர்களின் தொகை இன்னும் குறையாமல் கூடிக்கொண்டேதான் செல்கின்றது. ஆனால் எதற்கு விடுதலை, எதிலிருந்து விடுதலை என்பது தான் இன்னும் சரியாகத் திட்டவட்டமாக மக்கள் மத்தியில் எடுத்துக்கூறப்படவில்லை. பெண்களாகிய நாங்கள் இன்று விடுதலை கேட்கின்றோம் என்றால் நாங்கள் வாழுகின்ற இந்தச் சமுதாயத்தில் எமக்கு உரித்தான எமது ஆற்றல்களுக்கு ஏற்ற பாத்திரத்தை வகிப்பதற்கான உரிமையைத்தான் கேட்கின்றோம். இதில் ஆண் பெண் என்ற எந்த வித்தியாசமும் இன்றி மனிதர்கள் என்ற நோக்கின் அடிப்படையில்தான் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

இந்த சமுதாய அமைப்பில் இருந்து எமக்கு விடுதலை வேண்டுமேயானால் நாம் வாழுகின்ற இந்தச் சமுதாயம் அநீதியானது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு அந்த அநீதிகளை ஆராய்ந்து அதை ஒழிப்பதன் மூலம் தான் நாம் அதிலிருந்து விடுபடமுடியும். இத்தகைய அநீதிகள் திடீரென்று எம்மீது பொறிக்கப்பட்டவை அல்ல. வரலாற்று ரீதியாக ஏற்பட்ட பொருளாதார, கலாச்சார, அரசியல், சமூக மாற்றங்களின் விளைவே இன்று நாம் அனுபவிக்கின்ற ஒடுக்குமுறை.

''இன்று பெண்கள் ஆண்களைப் போன்று கல்வி கற்கச்செல்கின்றார்கள்; ஆண்களோடு சேர்ந்து வேலை பார்க்கின்றார்கள்; அதையும்விட சைக்கிளில் வேறு வீதியால் செல்கின்றனர்; இவற்றைவிட வேறு என்ன விடுதலை வேண்டும்?'' என்று கேட்பவர்கள் பலரை நாம் அன்றாடம் சந்திக்கின்றோம். இவர்களில் பலரும் பெண்களின் உண்மையான நிலையை ஒப்புக் கொள்ள மறுப்பவர்களாயும், சமூகத்தில் நிலவும் ஆண்களின் மேலாதிக்கத்திற்கு எதிர்ப்புக் கூற மறுப்பதோடு அதையே நீதியாக்கி நிலைநிறுத்த சாட்சிகளையும் தேடுகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் சமூகத்தில் பெண்களிற்கு இழைக்கப் படும் அநீதிகள் வெட்ட வெளிச்சமானவை. ஆனு லும் கூட அவற்றை ஒவ்வொன்ருக விளக்கமாக ஆராய்வோமேயானுல் எமக்கு இழைக்கப்படும் அநீதி களை இன்னும் நுணுக்கமாகப் புரிந்துகொள்ள முடியும். "ஒரு சமூகத்தில் குடும்பம் வகிக்கும் பங்கு மிக வும் முக்கியமானது. ஒரு மனிதனின் பிறப்பிடமாக வும் இது விளங்குவதால் ஒரு பெண்ணின் வாழ்க் கையைக் கட்டுப்படுத்தும் சக்திகளில் முதன்மையான தாகக் குடும்பம் விளங்குகின்றது. குடும்பங்களில் நிலவும் பிற்போக்குத்தனமான கருத்துக்களும், செயற் பாடுகளுமே ஒரு பெண் தன்னிச்சையாக உறுதியோடு செயல்படுவதைத் தடுக்கின்றது. இத்தகைய கருத் துக்கள் காலம் காலமாக இருந்து வருபவையாலுைம் அவற்றை மாற்றி அமைக்க வேண்டிய சமூக நிர்ப் பந்தம் எமக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ளது."

"பெண்ணனவள் பிறந்தது முதல் இறப்பதுவரை தந்தை, தமையன், கணவன், தனயன் என்று யாரை யாவது சார்ந்து வாழும் நிலைக்கே தள்ளப்படுகின்ருள். இதுவே பெண்கள் தமது தனித்தன்மையை இழக்கக் காரணமாகிறது. இத்தகைய அடிமை வாழ்க்கை முறைக்குப் பெண்கள் சிறு பிராயம் தொட்டே பழக்கப்படுத்தவும்படுகின்ருர்கள்."

''நீ செய்த பாவங்களின் பயனுக நீ பெண்ணுகப் பிறக்கின்ருய், அல்லது உன் பெற்ருேர்கள் செய்த பாவத்தின் காரணமாக அவர்களுக்குப் பெண் குழந் தைகள் பிறக்கின்ருர்கள்''. எங்கள் சமூகத்தில் சாதாரணமாகப் பெண்களின் பிறப்புப்பற்றிய கருத்து இதுதான் என்பது நாங்கள் எல்லோரும் அறிந்த ஒரு விடயமேயாகும். இவ்வாறு பெண்ணின் பிறப்பே எங்கள் சமூகத்தில் ஒரு சாபக்கேடாகக் கருதப்படு கின்றபோது அவளின் வாழ்க்கை நிலைபற்றி நாம் எதையுமே இந்த சமூகத்தில் இருந்து அதிகமாக எதிர் பார்க்க முடியாது. தலைப்பிள்ளையாக ஆண்பிள்ளை கள் இருப்பதைத்தான் பெற்ருேர்கள் விரும்புகின்ருர் கள். சாண்பிள்ளை என்ருலும் ஆண்பிள்ளையாக இருந்தால்தான் குடும்பச் சுமைகளை ஏற்க முடியும் என்று நம்புகின்ருர்கள். எல்லாவற்றையும் விடத் தங்கள் வாரிசாக விளங்கும் தகுதி !அதாவது குலப் பெருமை, பரம்பரைச் சிறப்புப் போன்ற பிற்போக் குத் தனமான அம்சங்களைக் காக்கும் தகுதி ஆண்க ளுக்கே உரித்தானதாகவும் கருதப்படுகின்றது. இதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பாலும் ஒருவன் ஆண்பிள்ளையால் இறுதிச்சடங்கு செய்யப்பட்டால்தான் அவனுக்கு மோட்சம் கிடைக்கின்றது என்று நம்பப்படுகின்றது. இவ்வாறு பெண் பிறப்பு குடும்பத்திற்கு ஏற்படும் அனுவசியச் சுமையாகவே இன்றும் பரவலாகக் கருதப்படுகின்றது.

இவ்வாறு சமூகத்தில் வேர் ஊன்றிவிட்ட பண்புகளாலும், கருத்துக்களாலும் பெண்கள் பிறப்பது எவ்வளவு வேண்டப்படாத செயலாக இருக்கின்றபோதும் இயற்கையின் நியதி, பெண்கள் பிறக்கவே செய்கின்றூர்கள். அவ்வாறு பிறந்துவிடும் பெண்கள் சமூகத்தின் எல்லா வர்க்கங்களிலும் ஆண்களால் கட்டுப்படுத்தப்படுகின்றூர்கள். ஆனுல் அடக்கப்படும் அளவுகளிலும், தன்மைகளிலும் தான் வர்க்கங்களிற்கு வர்க்கம் வேறுபாடு காணப்படுகின்றது.

எங்கள் சிறு பிராயங்களைச் சற்று நோக்குவோம். எங்களுக்குக் கூறப்படும் அறிவுரைகளையும் புகட்டப்படும் பழக்கங்களையும் நோக்குவோம். எங்கள் பெற்ருேர்கள் ஆண்பிள்ளைகளுக்குச் சைக்கிள் ஓட்டப் பழக்கும்போது பெண்பிள்ளைகளுக்குச் சமையல் அறை மூலையில் வெங்காயம் வெட்டப் பழக்குகின்ருர்கள். இத்தகைய போதனைகள்தான் எதிர்காலத்திலும் பிள்ளைகளின் வாழ்க்கையைப் பாதிக்கின்றது. உண்மையைக் கூறுவதானுல் சிறு வயது முதலே பெண் குழந்தைகள் தங்களை இழந்து, தாலிகட்டிய கணவன் கல்லானுலும், புல்லானுலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பதிவிரதா சிரோன்மணிகளாய் வருங்காலத்தில் வாழ்வதற்குச் சூழ்நிலைகள் ஏற்படுத்தப்படுகின்றன.

கல்விவசதி இன்று இரு பாலாருக்கும் கிடைக்கின்றபோதும் அதைக் கற்றுத் தேறுவதற்கான ஊக்கம் குடும்பங்களில் பெண்களைவிட ஆண்களுக்கே கூடுதலாகக் கிடைக்கின்றது. அவ என்ன படித்துக் கிழிக்கப் போரு, கட்டித் தொலைக்கிறதுதானே என்கிற மனப்போக்கு பெற்ருேரிடம் காணப்படுகின்றது. பெண்ணின் வாழ்க்கையானது கல்யாணம் செய்வதோடு முடிந்து விடுகின்றது என்ற எண்ணத்தின் வெளிப்பாடே பெண்கள் கல்வியில் பெற்ருேருக்குக் காணப்படுகின்ற அசட்டை மனப்போக்கு ஆகும்.

இத்தகையவற்றைவிட உணவு விடயத்திலும் கூடப் பெற்ருேர்கள் பாரபட்சமாக இருப்பதை நாங்கள் அறிய முடிகின்றது. சில விசேட கணிப்புக்களின்

www.tamilarangam.net

வாயிலாகக் குழந்தைகளில் போசாக்குக் குறைந்தவர் களாக ஆண்களைவிடப் பெண்களே இருக்கின்றனர். ஒரே குடும்பங்களிலேயே நாம் இந்த நிலையை அவதானிக்க முடிகின்றது. வளர்ந்து திருமணமான பின்பு கூட அனேகமான பெண்களின் இந்த நிலையில் மாற்றம் ஏற்படுவதில்லை. தாங்களே சமைக்கின்ற போதும் கணவன் பிள்ளைகள் உண்டபின்பே மனைவி உண்கின்றாள். இவையெல்லாம் காலங்காலமாகப் பெண்களின் மனங்களில் ஊறிவிடச் செய்யப்பட்ட கருத்துக்களின் பலனே.

மகிழ்ச்சியும், இளமையும் கூடிய இளம் பருவம் கூட பெண்களைப் பொறுத்தவரை எந்தவிதமான இன்பங்களையும், மகிழ்ச்சியையும் காணாத பருவமாகவே இருக்கின்றது. இந்தப் பருவத்தில் பெண்களிடம் எதிர்பார்க்கப்படும் அம்சங்கள் ஏதாவது இருந்தால் அவை அழகும், அடக்கமும் என்றே கூறுதல் வேண்டும்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்கள் இருப்பதுதான் பெண்களுக்கு அழகாகக் கருதப்படுகின்றது. பொம்பிளை சிரிச்சா போச்சு, புகையிலை விரிந்தால் போச்சு. இந்த வாக்கியமும் இதன் உண்மையான பொருளும் சமூகத்தில் காணப்படும் அநீதியைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. ஒருத்தி மனந்திறந்து மகிழ்ச்சியாகச் சிரிப்பது கூடப் பாவமாகக், குற்றமாகக் கருதப்படுமேயானல் அது எத்தகையகொடுமைவாய்ந்த சமுதாயம் என்பதை நாம் தெளிவாகக் கண்டுகொள்ளலாம்.

காதல் செய்யும் உரிமை ஆண், பெண் இருவருக்குமே உரிய ஒன்ருகும். ஆனுல் இன்றைய குடும்பங்களில் காணப்படும் ஒடுக்குமுறை இந்த உரிமையைக் கொடுக்க மறுக்கிறது. இந்த விடயத்தில் குடும்பங்கள் ஆண்களையும் கட்டுப்படுத்துகின்றபோதும் பெண்களோடு பார்க்கும்போது அவர்கள் கூடுதலாகவே இவ் உரிமையை அனுபவிக்கின்ருர்கள். காதலிப்பதால் ஏற்படும் விளைவுகள் பெண்களை மட்டுமே பாதிக்கின்றன என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒருத்தி ஒருவனைக் காதலித்து அதன் பின் முறிவு ஏற்பட்டால் அந்தப் பெண்ணின் எதிர்காலமே இருள் நிறைந்ததாகின்றது. ஆனுல் ஆண்களைப் பொறுத்தவரை இந்த நிலைமை இல்லை. அவர்கள் எத்தனை பெண்களைக் காதலித்து ஏமாற்றி இருந்

www.tamilarangam.net

தாலும் கூட அடுத்த நாளே அவர்கள் திருமணம் செய்துகொண்டு விடலாம். காதல், காதல், காதல் காதல் இன்றேல் சாதல் என்று பாடிச் சென்றார் பாரதி. ஆனால் காதலித்த பெரும் பாவத்திற்காகச் சாகின்ற பேதைகளைத்தான் நாங்கள் எங்கள் சமூகத்திலே காண்கின்றோம்.

திருமணம் என்பது பெண்களைப் பொறுத்தவரை ஒருவித அடக்குமுறையில் இருந்து இன்னோர் விதமான அடக்குமுறைக்குச் செல்கின்ற வாசலாகவே விளங்குகின்றபோதும் திருமணம் செய்ய வேண்டும் என்கிற நிலை காணப்படுகின்றது. எதில், யாரை, எதற்காக என்ற கேள்வியை எழுப்பும் உரிமை பெண்களுக்குக் கிடையவே கிடையாது. அவர்கள் தாலிக் கயிற்றைக் கழுத்தில் தொங்கவிட வேண்டும். அது ஒன்றுதான் பெண்களுக்கும், திருமணத்திற்கும் இருக்கின்ற தொடர்பு. பெண் தேவை என்ற விளம்பரம் என்ன சொல்கிறது?

''இந்து வேளாளர் மரபில் பிறந்த பதினெட்டு வயதிற்கும், இருபத்திமூன்று வயதிற்கும் இடைப்பட்ட பெண் தேவை. நல்ல பண்பும், பழக்கவழக்கமும் கொண்ட பெண்ணாக இருப்பதோடு நல்ல உயரமும், நிறமுமாக இருந்தால் விரும்பப்படும். அத்தோடு க.பொ.த. உயர்தரத்தில் சித்தி அடைந்தவர் ஆகவும், பாடக்கூடியவராக இருப்பதோடு வாத்தியங்கள் வாசிக்கத் தெரிந்தால் நன்று. மாப்பிள்ளை இங்கிலாந்தில் பொறியியல் துறையில் கல்வி கற்கின்றார். பெண்களின் உறவினர் இங்கிலாந்தில் இருந்தால் நன்று. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;''

நாவல்களும், கதைகளும் போற்றும் பெருமைமிக்க பெண்ணினம் கல்யாணச் சந்தையில் விளம்பரப் படுத்தி தெரியப்படும் முறை இதுதான். ஆனால் முக்கியமான கேள்வி இதுவல்ல. பெண்ணைத் தெரியும்போது கேட்கப்படும் தகமைகள் இவை மட்டும் தானா என்று பார்த்தால் இல்லை. கோரிக்கையின் ஒரு சொற்ப பகுதிதான் இது. உண்மையான கோரிக்கை ஒரு வீடு, ஒன்றரை இலட்சம் காசு, ஐம்பதாயிரம் டொனேஷன், 25 பவுணில் தங்க நகைகள். பெண்ணிடம் இருந்து சராசரியாக எதிர்பார்க்கப் படுவது இவைதான். ஆனாலும் சமூகத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஆண்களுக்கான இந்த விலைகள் அவர்களின் தகுதிக்கேற்ப மாறுபடும். ஆகவே பெண்

www.tamilarangam.net

ணின் பெற்றோர் இந்த விலையைச் செலுத்த வாழ்க்கை முழுவதும் பாடுபட்டுத் தங்கள் பெண்களின் கழுத்திற்கு ஒரு மஞ்சள் கயிற்றை வாங்கிக் கொடுக்க வேண்டும். இதுதான் பெண்களின் பிறப்பைப் பெற்றோர்கள் சுமையாகக் கருதக் காரணம் ஆகின்றது.

இதைவிட இத்தனை விலைகொடுத்து வாங்கும் ஆண்பிள்ளையோடு பெண்களின் வாழ்க்கை இன்பமானதாய் விளங்குகின்றதா? அவளுக்கு முன்பின் தெரியாத ஒருவன் ஜாதகப் பொருத்தம் என்ற ஒன்றே ஒன்றை வைத்துக் கொண்டு பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுகின்றான். தாலி கட்டிவிட்டாலோ அவளுக்கு அவன் எஜமானன் ஆகிவிடுகின்றான். அவளோ அவனின் அடிமையைப் போன்று தனது வாழ்க்கையை இன்னுமொருவனின்கீழ் நடத்த ஆரம்பிக்கின்றாள்.

ஒரு பெண்ணினது தகுதிக்கு ஏற்ற கணவன் அவளுக்கு அனேகமாகக் கிடைப்பதில்லை. அவளின் தந்தையிடம்இருக்கும்பணத்திற்கு ஏற்பதான் அவளுக்குக் கணவன் கிடைக்கின்றான். மனம் ஒத்த இருவரின் தாம்பத்திய வாழ்வு என்பது இன்னமும் வெறும் கனவாகவே விளங்குகின்றது. இவ்வாறு திருமணம் மனம் ஒத்தோரின் வாழ்வு என்பதைவிடப் பணம் ஒத்தோரின் வாழ்வாகவே விளங்குகின்றது.

ஒரு பெண்ணினது 'ஆற்றல்களிற்கும், திறமைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் சம்பவமாகவே இன்று திருமணம் விளங்குகின்றது. எவ்வளவுதான் கல்வி கற்றிருந்தாலும் அதைச் சமூகத்திற்குப் பயன்படுத்த முடியாத வண்ணம் பெண்கள் தடை செய்யப்படுகின்றார்கள். சமூகத்தின் மேல் மட்டத்தில் இத்தகைய நிலையைக் காணலாம். ஒருவேளை பெண்கள் பொருளாதார சமத்துவத்தைப் பெற்றுவிட்டால் தன்னிச்சையாகச் செயல்படும் நிலையைப் பெற்று விடுவார்களோ என்கின்ற பயம் இதற்குக் காரணமாக இருக்கலாம். எனினும் இன்றைய நெருக்கடியான பொருளாதார நிலைமை பெண்கள் தொழில் பார்க்கச் செல்வதைக் கட்டாயப்படுத்தி இருக்கின்றபோதும் ஊதியம் பெறும் தொழிலைக் கவனிப்பதோடு மட்டும் அன்றி ஊதியம் பெறாத வீட்டுத் தொழிலையும் வழக்கம் போலவே பெண்கள் தலையில்தான் சுமத்தி விடுகின்றது. ஆகவே ஒட்டுமொத்தமாகப் பெண், பொதி சுமக்கும் கழுதையாக மாறுகின்றாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகவே இன்றைய குடும்ப வாழ்க்கையானது சிறுபிள்ளை முதல் பெரியவள் ஆகும் வரை ஒவ்வொரு விதமான ஒடுக்குமுறைக்குப் பெண்களை உட்படுத்தியே வருகின்றது. இது ஒரு நச்சுவட்டம் போன்று பெண்களின் வாழ்க்கையை, ஆற்றல்களைப் பாழ்படுத்துகின்றது.

ஒரு பெண்ணின் வாழ்க்கையானது அவளது கணவன் இறப்பதோடு முடிவடைவதாகக் கருதப்படுகின்றது. எந்தச் சுப காரியங்களிலும் பங்குபற்றும் உரிமை அவளுக்கு மறுக்கப்படுகின்றது. இதுவே அவள் ஒரு தனியான மானிடப் பிறப்பு என்பதைச் சமூகம் அங்கீகரிக்காததைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இந் நிலைமையானது பொருளாதார காரணங்களால் ஏற்பட்டது. எனினும் அவர்களும் பொருளாதார நிலைமையைச் சமத்துவமாய்ப் பெற்றிருக்கின்ற வேளையிலும், இந்தக் கருத்துக்களின் எச்சசொச்சங்கள் பெண்களைப் பாதிக்கவே செய்கின்றன.

மறுமணம், விவாகரத்துப் போன்றவற்றில் பெண்களிற்கு ஓரளவு சமமான உரிமை சட்டப் புத்தகங்களில கொடுக்கப்பட்டிருக்கின்ற போதிலும் அதை நடைமுறைப்படுத்தக்கூடிய சமூக நிலைமைகள் அரிதாகவே உள்ளன. மறுமணம் செய்கின்ற மனைவியை இழந்த ஆண்களின் தொகை விதவைகளின் தொகையைவிடக் கூடுதலாக உள்ளது. அதேபோன்று எங்கள் சமூகத்தில் விவாகரத்து எடுத்துவிட்டு மறுமணம் செய்கின்ற பெண்களின் தொகையும் மிகவும் சொற்பமாகவே இருக்கின்றது. இவையெல்லாம் சமூகத்தில் பெண்களிற்கு இழைக்கப்படும் அநீதிகளையே தெட்டத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

மிக நெருக்கடியான காலகட்டத்தில் நாம் இன்று வாழ்கின்றோம். அரசியல் மாற்றங்களும் போராட்டங்களும் எமது வாழ்க்கையை முற்றுமுழுதாகப் பாதிக்கின்றன. இந்த நிலைமையில் அரசியல் போராட்டங்களில் பெண்களிற்கான பங்களிப்பு என்ன என்கின்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகின்றது. நேற்றைய சமூகத்தில் பெண்களின் அரசியல் உரிமை அரசியல் பங்களிப்பு என்பதெல்லாம் வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிப்பது என்பதைத்தான் குறித்தது. அரசியலில் பெண்களின் பரவலான ஈடுபாடு காணப்படவில்லை. மிக மிகச் சொற்பமான அளவில் தான் பெண்கள் அரசியல் வாழ்க்கையில் ஈடுபட்டார்கள்.

www.tamilarangam.net

எனினும் இன்று காலம் மாறிவிட்டது. அரசியல் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம், போராட்டங்களின் உக்கிரமான நிலை மேலும் மேலும் பெண்களை அரசியல் போராட்டங்களில் பங்குபற்றும் நிலைமைக்கு ஆளாக்குகின்றது. வரலாற்றில் எந்த ஒரு அரசியல் போராட்டங்களிலும் பெண்களின் பங்களிப்பு கணிசமான அளவு காணப்படுகின்றபோதும் போராட்டங்களின் முடிவிற்குப் பின்னர் பெண்களின் நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்படாமல் அவர்கள் மீண்டும் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலேயே வாழ்வதைக் காணலாம். ஆகவே வரலாறு கற்பிக்கும் பாடங்களை மனத்தில் கொண்டு அரசியல் போராட்டங்களோடு கூடவே எமது சமூகத்தில் பெண்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய அரசியல் போராட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு பெண்கள் பங்குபற்றவில்லையாயினும் சிறுதொகையினராவது பங்குபற்றவே செய்கின்றனர். ஆனால் பிற்போக்குத்தனமான கருத்துக்களில் ஊறிப்போன எங்கள் சமுதாயம் இதைக் கண்டிப்பது எள்ளளவும் வியப்புக்குரியதன்று. ஆனால் அரசியல் போராட்டங்களில் ஈடுபடும் பெண்கள் சரியான வழிகளில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதுதான் முக்கியமானது.

யாழ்ப்பாண பிரதேசத்திற்கே பிரத்தியேகமான தேசவழமைச் சட்டமானது பெண்களது பொருளாதார ரீதியான சுதந்திரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்துவதாகவே அமைகிறது. பெண்கள் மீதான பொருளாதார ரீதியான அடக்குமுறை அவர்களை ஆண்களுக்கு அடிபணிய வைக்கக்கூடிய ஒரு உபாயமாகத் தேசவழமைச் சட்டத்தில் கையாளப்பட்டுள்ளது. பெண் விடுதலை தொடர்பாகப் பெரிதும் பேசப்படுகின்ற போதும் இத்தேசவழமைச் சட்டத்தில் பெண்களது சுதந்திரத்தைப் பறிக்கும் சட்டங்களை மாற்றியமைப்பது தொடர்பாக எவ்வித முயற்சிகளும் எடுக்கப்படாமை பெண்விடுதலை பற்றிய கருத்து நம்மவர் மத்தியில் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துள்ளது என்பதுபற்றி ஓரளவு அறியக்கூடியதாக உள்ளது.

ஒரு பெண் தான் திருமணம் செய்யும்போது தனது பெற்றோரால் வழங்கப்படும் சொத்தினைப் பெற்றுக்கொள்வதற்குக் கூடக் கணவனின் சம்மதம் தேவைப்படுகிறது. பெற்றோரால் வழங்கப்படும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொத்தினை ஏற்கும்போது ''இச்சீதன ஆதனத்தை மகிழ்ச்சியுடனும், நன்றியறிதலுடனும் என் நாயகனின் சம்மதத்துடனும் ஏற்றுக் கொள்கின்றேன்'' என கணவனின் கையொப்பத்துடன் கூடிய சம்மதத்துடனேயே ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் கணவன் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளும்போது மனைவியிடம் இருந்து எவ்வித சம்மதமும் வேண்டப்படுவது இல்லை.

ஒரு பெண் தனது பெயரில் பெற்றுக்கொண்ட சொத்து சட்டப்படி அவளுக்கே உரிமையுடையதாயினும் அச் சொத்தினைக் கணவனின் சம்மதமின்றி விற்கவோ, ஈடுவைக்கவோ, நன்கொடையாகக் கொடுக்கவோ அல்லது வேறு எவ்விதமாகக் கையளிக்கவோ உரிமையற்றவள். எனவே பெயரளவிலேயே அவள் உரிமையுடையவளாக இருக்கின்றாள். ஆனால் கணவனோ தனது பெயரில் இருக்கும் சொத்தினை மனைவியின் சம்மதம் இன்றி விற்கவோ, ஈடுவைக்கவோ, நன்கொடையாகக் கொடுக்கவோ அல்லது வேறு எவ்விதமாக கையளிக்கவோ உரிமையுடையவன். எனவே ஒரு பெண் எவ்வளவு சொத்துக்கள் வைத்திருந்தாலும் கணவனின் சம்மதம் இன்றி அவற்றைக் கையளிக்க முடியாது. ஆகையால் பொருளாதார ரீதியில் மிகவும் பலவீனமான நிலைக்கே தள்ளப்படுகிறாள். இக்காலத்தில் கலியாணம் பேசும்போது ஆண் வீட்டுக்காரர் பெண் வீட்டுக்காரரிடம் ''உங்களுடைய மகளுக்குத்தானே கொடுக்கச் சொல்லிறம், கொடுக்கிறதையெல்லாம் கொடுங்கள்'' எனக் கூறுவதைச் சீதனப் பேச்சுவார்த்தைகளில் கேட்டிருக்கிறோம். பொருளாதார சுதந்திரத்தைத் தமது மகளுக்கு வழங்கும் என எண்ணி சீதனம் வழங்கப்பட்டாலும் இக்கட்டான நிலையில் இது உண்மையன்று என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாகக் கணவன் தனது மனைவியை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டால் வேலை பார்க்காத பெண்ணையின் எவ்வித பண வருமானமும் அற்றவளாக இருப்பாள். இந்நிலையில் தனது சொத்துக்களை விற்றுவது பிழைக்கக்கூடிய நிலையில் அவள் இல்லை. ஏனெனில் கணவனின் சம்மதம் இன்றிச் சொத்துக்களை விற்கவோ அல்லது ஈடு வைக்கவோ அவளுக்கு உரிமையேதுமில்லை. எனவே சொத்துக்கள் இருந்தும் அவை அவளுக்குப் பொருளாதார ரீதியில் உதவுவதாக இல்லை. இன்னுமொரு சம்பவத்தில் கணவன் ஒரு குடிகாரனாகக் குடும்பத்திற்குப் பெரும் கஷ்டம் ஏற்படுத்திக் கொண்டிருந்தான். மகளுக்குக் கல்யாணப் பேச்சு முற்றாகியபோது அக் குடி

www.tamilarangam.net

காரணுன கணவன் தனது மனேவி அவளது சொத்தை தன் கலியாணமாகவிருக்கும் மகளுக்குக் கையளிப்ப தற்குச் சம்மதம் கொடுக்கப் போவதில்லே எனக் கூறி விட்டான். பின்னர் 5,000 ரூபா கொடுத்தால் தான் சம்மதித்துக் கையொப்பம் இடுவதாகக் கூறினுன். எனவே இங்கு ஒரு பெண் தனது பெயரில் உள்ள தனது சொத்தைத் தனது மகளுக்குக் கைய ளிப்பதற்குக் கணவனுக்கு 5,000ரூபா கொடுத்துச் சம்மதம் வாங்கவேண்டிய நிலேக்கு நமது தேசவழமைச் சட்டம் இடங்கொடுத்துள்ளது.

மேலும் திருமணமான பெண் கணவனின் சம் மதம் இன்றி எவ்வகையான ஒப்பந்தங்களிலும் கைச் சாத்திட முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. ஆனுல் ஆண்களோ மனேவியின் சம்மதம் இன்றி எவ்வகை யான ஒப்பந்தங்களிலும் ஈடுபடலாம் எனக் கூறப்பட் டுள்ளது.

கற்பழிப்பு — இதைப்பற்றிப் பேசுவதே எங்கள் புனிதமான சமூகத்தைப் பொறுத்தவரை பாவமாகக் கருதப்படுகின்றது. கற்பழிப்பு என்பது பெண்களின் மேல் பிரயோகிக்கப்படும் ஒரு வன்முறையே. இதை யும் வன்செயலோ, பலாத்காரமோ என்று கூறுதல் தான் சாலப் பொருந்தும். எங்கள் சமூகத்தில் ஒரு பெண் பலாத்காரப்படுத்தப்பட்டாள் என்ருல் எங் கள் சமூகம் பலாத்காரப்படுத்தியவனேத் தேடிக் கண்டு பிடித்து சாட்சிகூறி தண்டிப்பதை விடுத்துத் தங்கள் மனப்பூர்வமான வசைகளே அந்தப் பெண்ணின்மீது சுமத்துகின்ருர்கள். இதனுல்தான் பலாத்காரத்திற்கு உட்பட்ட பெண் தன்னேப் பலாத்காரப்படுத்திய வனேச் சமூகத்திற்கு அடையாளம் காட்ட முடியாமல் உள்ளது. பெற்ருேர்கள் கூட தங்கள் பெண்ணிற்கு ஏற்பட்ட இந்த நிலேயை இயன்றவரை மறைக்க முயல் கின்றனர். இதனுல் பலாத்காரம் செய்த நபர்க ளுக்கு வேண்டிய பாதுகாப்பையும், மறைவையும் தாங்களே ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். சட்டம் கூட பலாத்காரத்திற்குச் சாட்சியங்கள் கேட்கிறது. பலாத்காரம் செய்பவன் தனக்கு எதிரான சாட்சியங் களே வைத்திருப்பானு? எவ்வளவு வேடிக்கை! எமது சமூகத்தில் இவையெல்லாம் ஆண்வர்க்கம் தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ஏற்படுத்திய சட்டங்களே யாகும்.

[தொடர்ச்சி.......
37ம் பக்கம் பார்க்க]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## DESIRER UN ENFANT

Les programmes de la télévision, de la radio ou de la presse écrite nous parlent de nouvelles techniques sur les "procréations assistées".

C'est un sujet brûlant sur lequel il est difficile de prendre une position absolue. Vouloir un enfant quand le couple a déjà vécu quelques années ensemble, est un sentiment fort louable. Lorsque le spectre de l'infertilité devient menaçant, il est bien normal que le couple s'inquiète et s'enquiert sur des moyens qui pourraient corriger cette anomalie.

Pour avoir vécu de longues années en Asie, particulièrement au Sri Lanka, je comprends l'angoisse de jeunes couples qui voient les mois, puis les années s'écouler sans qu'un enfant s'annonce. L'instruction de Rome parue l'an dernier a été manifestement écrite par un ecclésiastique européen. Certes il est bon que l'Eglise pose des points de repère dans une société permissive, où la vie ne compte guère. Mais cette société permissive ne couvre pas toute la planète et les cultures sont différentes selon les continents. Une jeune femme stérile est une malédiction dans un couple selon les cultures orientales, où un fils doit assumer la continuité du nom. Il y a encore de nos jours des régions où la naissance d'une fille aboutit à la disparition du bébé dont l'avenir a encore conservé un caractère improductif. De plus dans les pays où les jeunes filles doivent apporter une dot pour trouver un partenaire, la naissance de plusieurs filles devient une catastrophe. Si le mari est intelligent et a du coeur, il saura partager cette mésaventure avec sa femme sans trop lui faire porter un complexe de culpabilité. Mais le couple stérile est montré du doigt, l'homme comme la femme étant considérés avec beaucoup de mépris.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Or dans certaines sociétés comme j'en ai connues au Sri Lanka, surtout dans l'ethnie tamoule, les parents cherchent des partenaires pour leurs enfants dans la famille proche, pour que les biens ne sortent pas du cercle familial. Ceci est valable pour les catholiques comme pour les hindous. J'avais été frappé par le grand nombre d'enfants sourds-muets, aveugles et handicapés mentaux au Sri Lanka. Il faudra encore deux ou trois générations avant que les jeunes sachent prendre assez d'indépendance avec leurs parents pour décider du choix de leur partenaire. Très récemment une jeune fille de 27 ans, universitaire, ayant déjà exercé une profession dans son pays me disait combien elle devait veiller à sa réputation jusqu'au jour de son mariage. Eh bien, elle qui avait à assumer des responsabilités et à prendre des initiatives, trouvait très normal que ce soit son frère aîné qui choisisse son futur mari. Avec une note fataliste, elle ajoute : "c'est la vie". Par contre je connais quelques jeunes femmes tamoules qui ont fait le choix de leur partenaire. En exil c'est une démarche lourde, car c'est une coupure irrémédiable avec la famille, le rejet des parents restés au pays, des frères et soeurs, cousins et cousines en Europe. Très peu de jeunes vont jusque là aujourd'hui.

L'appauvrissement de la race est donc un risque où sont plongés des couples qui sont menacés par la stérilité. D'où l'intérêt que plusieurs manifestent pour les "procréations assistées". Ce n'est pas seulement la honte qui motive ces couples, ou la volonté de se prouver capables comme tout le monde, d'élargir le cercle de la famille ou de se projetter dans un avenir plus ou moins lointain, ou encore de laisser un patrimoine à sa descendance, mais aussi la joie de construire ensemble un foyer stable, ouvert et accueillant.

Il peut y avoir plusieurs possibilités de se soigner, la médecine fait tellement de progrès ! Les



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

jeunes femmes ayant eu dans leur pays un tout autre style de vie, peuvent avoir des carences qui auront peut-être la possibilité d'être soignées par des moyens médicaux qui n'auront pas à aller jusqu'à la "procréation assistée" ou à la "Fivète homologue". La science a découvert et continue à découvrir les mécanismes de la nature et peut trouver des moyens pour les corriger si besoin est. Le Pape Jean-Paul Ier dans la très brève période de son exercice a acclamé la naissance de la première petite fille née grâce à une fécondation in vitro, avec beaucoup d'enthousiasme. Le monde entier a fait écho à l'émerveillement du Pape devant cette nouvelle technique de la fécondité qui avait donné la vie. Dans la Genèse Dieu a donné à l'homme le droit et le devoir d'être "co-créateurs", d'être gestionnaires de sa création. Il nous demande de respecter la vie de l'être humain afin qu'il puisse s'épanouir au mieux et accomplisse pleinement sa tâche.

C'est à chacun de juger et d'agir en toute liberté et en pleine connaissance des démarches possibles pour accomplir l'équilibre et le bonheur du couple qu'il forme.

(34ம் பக்கத் தொடர்ச்சி:)

இவ்வாறு எமது சமூகத்தில் பல வழிகளிலும் வஞ்சிக்கப்படும் பெண்கள் தங்களை .இனிமேலாவது இவ் ஒடுக்குமுறைகளிலிருந்து விடுவிக்க விரும்பினால் இவற்றுக்கு எதிராகக் கிளர்ந்து எழுதல் வேண்டும். சமூகம் முழுவதிலும் பெண்களின் நிலைபற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படுதல் வேண்டும். பெண்களின் முழுமையான விடுதலை மூலமுந்தான் சமூகம் முழுமையான விடுதலையைப் பெற முடியும்.

நன்றி:
"பெண்ணின் குரல்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

LA COMMUNAUTE DES TAMOULS DU SRI LANKA

A PARIS VOUS SALUE ET VOUS PARLE.




Le Sri Lanka est une île habitée par les Tamouls au Nord et à l'Est, le reste étant le territoire des Cingalais, bien que des Tamouls travaillent dans le Centre. Les deux races s'opposent l'une à l'autre, l'une voulant retrouver ses frontières d'antan, tandis que l'autre veut dominer tout le pays.

L'île fut envahie par les Portugais au 16è siècle, puis par les Hollandais le siècle suivant. Au 18è siècle les Britanniques s'emparèrent du pays en imposant le même et seul régime aux deux communautés. C'est à cette époque que l'administration anglaise firent amener des travailleurs immigrés originaires du Tamil Nadhu de l'Inde du Sud pour l'exploitation des plantations du thé au centre l'île. Ceux-ci jouirent alors du droit de vote comme sujets britanniques. Mais à l'indépendance du pays en février 1949, ils perdirent leurs droits civiques et devinrent apatrides. Ils étaient près d'un million.

En 1956, la majorité parlementaire cingalaise imposa leur langue comme seule langue officielle de

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

la nation. Beaucoup de Tamouls perdirent ainsi leur emploi.

En 1958, une émeute éclata contre les Tamouls dont un grand nombre perdit la vie et les biens. A partir de 1960 la population tamoule entreprit une vaste campagne de non-violence pour le rétablissement de ses droits, mais la police et l'armée les brutalisèrent à chaque manifestation. En 1970, les jeunes tamouls se virent fermer les portes de l'université. Le 22 mai 1972, la "République Socialiste Démocrate du Sri Lanka" fut proclamée, établissant les Tamouls citoyens de deuxième classe. C'est ainsi que la jeunesse tamoule s'organisa pour défendre ses droits. La police gouvernementale poursuivit les leaders, les tortura et les jeta dans des cachots. En août 1977 une deuxième émeute éclata et se répandit sur toute l'île. Elle fut extrèmement violente et sanguinaire. Beaucoup de familles tamoules fuirent le centre du pays et se réfugièrent dans les Provinces Nord et Est. Les forces de l'ordre appuyèrent et même fomentèrent des actes de violence comme l'incendie de la Bibliothèque de Jaffna -l'une des plus documentées de l'Asie- et de tout un quartier de la ville dont le marché. Le mouvement des jeunes tamouls s'amplifia à mesure que la violence des forces de l'ordre s'accroissait. C'était l'impasse. Les jeunes résistants ne cédèrent pas malgré le régime de terreur imposé par la police et l'armée soutenues par le gouvernement en place depuis juillet 1977. D'où l'exode de jeunes résistants qui, ayant subi la torture et l'emprisonnement, fuient le Sri Lanka pour demander l'asile politique en France. Ils savent cependant que de multiples problèmes les attendent : logement, emploi, isolement du fait de la langue et de la culture, administration française compliquée.

Les années passent et la lutte s'est intensifiée. Des familles entières se sont exilées. Ironie du sort, l'armée Indienne, qui était venue établir la paix, détruisit férocement population et résistants



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

qui aspiraient à une plus grande autonomie. Des combats sporadiques se poursuivent encore aujourd'hui malgré des milliers de morts, des centaines et des centaines de maisons pillées et détruites.

Cependant les exilés espèrent toujours que l'heure de la paix et de la réconciliation poindra. La solidarité peut vaincre les difficultés. Alors on s'organise, d'où le "Groupe des Femmes du Sri Lanka".





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net